# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் வேர்ச்சொல் உண்டு எனக் கண்டறிந்து கூறியவர்

அ) தனிநாயகம் அடிகளார் ☐ ஆ) விபுலாநந்தர் ☐

இ) தேவநேயப்பாவாணர் ☐ ஈ ) அல்பேர்ட் சுவைட்சர் ☐

2. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து

அ) உ ☐ ஆ) ண் ☐

இ) கொ ☐ ஈ ) ழ் ☐

3. இன்றைய ஈரான், ஈராக் ஆகிய நாடுகள் அந்நாளில்________________ என அழைக்கப்பட்டது.

அ) கரப்பா ☐ ஆ) மெசப்பத்தோமியா ☐

இ) பாகித்தான் ☐ ஈ ) மொகஞ்சதாரோ ☐

4. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று

அ) நாலடியார் ☐ ஆ) திருக்குறள் ☐

இ) திரிகடுகம் ☐ ஈ ) நெடுநல்வாடை ☐

5. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் போது இடப்படும் நிறுத்தற் குறி

அ) முக்காற்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முற்றுப்புள்ளி ☐ ஈ ) அரைப்புள்ளி ☐

6. இலங்கையரசு சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்னும் சட்டத்தைக் கொண்டுவந்த ஆண்டு

அ) 1956 ☐ ஆ) 1948 ☐
இ) 1971 ☐ ஈ) 1833 ☐

7. **காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்.** இதில் பரிதி என்பது

அ) ஞாயிறு ☐ ஆ) திங்கள் ☐
இ) ஞாலம் ☐ ஈ) உலகம் ☐

8. **கடுகு சிறிது காரம் பெரிது** என்ற பழமொழியின் கருத்து

அ) பயனற்ற தன்மை ☐
ஆ) இழிந்தோர் உயர்வை அறியார் ☐
இ) உருவைக் கண்டு எடை போடாதே ☐
ஈ) தகுதிக்கு மேல் எண்ணாதே ☐

9. கல்லோயாத்திட்டம் உருவாக்கப்பட்ட மாவட்டம்

அ) திருகோணமலை ☐ ஆ) முல்லைத்தீவு ☐
இ) மட்டக்களப்பு ☐ ஈ) மணலாறு ☐

10. அகத்துறைப் பாடல்களில் இடம்பெறாதவர்

அ) தோழி ☐ ஆ) செவிலித்தாய் ☐
இ) பகைவன் ☐ ஈ) தோழன் ☐

11. உழவர்கள் வயலில் ____________ பிடுங்கினர்.

அ) கலை ☐ ஆ) கழை ☐
இ) கறை ☐ ஈ) களை ☐

12. குமரிக்கண்ட மாந்தனின் இடையறாத வாழ்வோடு இணைந்த ஒரு நிலப்பகுதி

அ) அமெரிக்கா ☐ ஆ) இலங்கை ☐

இ) ஐரோப்பா ☐ ஈ) கனடா ☐

13. கலைகளில் அவள்____________எனக் கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்.

அ) ஓவியம் ☐ ஆ) சிற்பம் ☐

இ) இசை ☐ ஈ) நடனம் ☐

14. **வைகறையில் துயில் எழு** என்பது

அ) பொதுமொழி ☐ ஆ) தொடர்மொழி ☐

இ) ஒருமொழி ☐ ஈ) தனிமொழி ☐

15. **கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டம்** பற்றிய செய்தியைக் கூறும் நூல்களில் ஒன்று

அ) மூதுரை ☐ ஆ) கலித்தொகை ☐

இ) யாழ்நூல் ☐ ஈ) நாலடியார் ☐

16. செவ்வந்திப் பொழுது என்பது

அ) நண்பகல் ☐ ஆ) காலை ☐

இ) சாயுங்காலம் ☐ ஈ) யாமம் ☐

17. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன

அ) ஐங்குரவர் ☐ ஆ) ஐம்புலன்கள் ☐

இ) ஐம்பொறிகள் ☐ ஈ) ஐம்பேராயம் ☐

18. பழந்தமிழ் நாட்டில் இருந்த தமிழ்க்கழகங்கள்

அ) நான்கு ☐ ஆ) மூன்று ☐

இ) இரண்டு ☐ ஈ) ஒன்று ☐

19. நாட்டார் இலக்கியக் கலை வடிவங்களில் ஒன்று

அ) புதுக்கவிதை ☐ ஆ) திரைப்படம் ☐

இ) வில்லுப்பாட்டு ☐ ஈ) இக்காலக்கவிதை ☐

20. **குமுறிக்குமுறி** என்பது

அ) உவமைத்தொடர் ☐ ஆ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழித்தொடர் ☐

21. பெயரெச்சத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கட்டிய ☐ ஆ) கட்டி ☐

இ) கட்டினான் ☐ ஈ) கட்டு ☐

22. **"நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே"** என்று கூறியவர்

அ) தருமி ☐ ஆ) கம்பர் ☐

இ) ஒட்டக்கூத்தர் ☐ ஈ) நக்கீரர் ☐

23. ஆல், அன், ஆள், அர், ஆர் என்பன

அ) பெயர்ச்சொற்கள் ☐ ஆ) உரிச்சொற்கள் ☐

இ) வினைச்சொற்கள் ☐ ஈ) இடைச்சொற்கள் ☐

24. **என் இராசா வாடி!** என்பது

அ) திணைவழுவமைதி ☐ ஆ) பால்வழுவமைதி ☐

இ) இடவழுவமைதி ☐ ஈ) மரபுவழுவமைதி ☐

25. சேரன் செங்குட்டுவன் மலைவளங்காணச் சென்ற காலம்

அ) இளவேனில் ☐ ஆ) முதுவேனில் ☐
இ) கார் ☐ ஈ) பனி ☐

26. முன்றில் என்பது

அ) மங்கல வழக்கு ☐ ஆ) இலக்கணப்போலி ☐
இ) தகுதிவழக்கு ☐ ஈ) மரூஉ ☐

27. மருதநில அரங்கில் மயில்களின் ஆடலைப் பார்ப்பவை

அ) தாமரைகள் ☐ ஆ) குவளைகள் ☐
இ) நீரலைகள் ☐ ஈ) முகில்கள் ☐

28. தேவநேயப்பாவாணர் எழுதிய ஆய்வு நூல்களில் ஒன்று

அ) தமிழ்மறை விருந்து ☐
ஆ) வடமொழி வரலாறு ☐
இ) தனித்தமிழ் அகராதி ☐
ஈ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி ☐

29. இயற்கை இன்பம் என்னும் பாடத்தில் காவிரியை ஓர் இளமங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) கம்பர் ☐ ஆ) இளங்கோ ☐
இ) புகழேந்தி ☐ ஈ) முடியரசன் ☐

30. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அகப்புற வாழ்க்கை ஒழுக்கம்

________________ ஆகும்.

அ) முதற்பொருள் ☐ ஆ) கருப்பொருள் ☐
இ) உரிப்பொருள் ☐ ஈ) மெய்ப்பொருள் ☐

| புள்ளிகள் 30 |
|---|

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முன்னொரு காலத்தில் மேலாண்மை செலுத்திய சிலரின் உடைமையாக மொழி இருந்தது. இன்று பொதுவாக மக்களின் ஊடகமாக அது வளர்ந்துள்ளது. மக்களின் பேச்சுவழக்குகளும் இன்று இழித்து ஒதுக்கப்படுவதில்லை. பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுத்தும் உதவியும் வருகின்றன. பெரும்பாலும் மக்களுக்குக் கருத்துகளையும் பட்டறிவுகளையும் எடுத்துச் செல்லத்தக்க கருவியாக மொழியை வளர்க்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. கலை இலக்கியங்களைப் பொறுத்த வரையில் அவை மக்கள் வாழ்வினை வளம்படுத்த உதவுவனவாக இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி உள்ளது. இறைவனையும் மேன்மக்களையும் பாடிய பழைய இலக்கியங்களைப் போலன்றி புதிய இலக்கியங்கள் எளியநிலை மக்களின் வாழ்வினை வெளிப்படுத்துகின்றன. அவர்களின் பெருமைகளையும் சிறுமைகளையும் உண்மையோடு நோக்குகின்றன. தமிழ் இலக்கியங்கள், புலம்பெயர் இலக்கியங்கள், சிற்றூர் இலக்கியங்கள் என்பன தமிழ் இலக்கியத்திற்குப் புதிய படிமலர்ச்சியினை அளித்துள்ளன. புதுப்பாக்கள் காலப்போக்கில் எளிமையும் நெகிழ்ச்சியும் பெற்றுள்ளன. பேச்சுவழக்குகளும் நாட்டுப்புறப்பாடல் பாங்குகளும் புதுப்பாக்களில் எடுத்தாளப்படுகின்றன. புதிய பட்டறிவுகளையும் சிந்தனைகளையும் நயம்பட வெளியிடும் இப் புதுப்பாக்கள் தமிழுக்கு வளம் சேர்க்கின்றன.

1. கலை இலக்கியங்கள் எதனை வளம்படுத்த உதவுவனவாக இருக்க வேண்டும்?

_______________________________________________

_______________________________________________

2. பழைய இலக்கியங்கள் எவற்றைப் பாடின?

_______________________________________________

_______________________________________________

3. எவை தமிழ் இலக்கியத்திற்குப் புதிய படிமலர்ச்சியினை அளித்துள்ளன?

_______________________________________________

_______________________________________________

4. புதுப்பாக்களில் எவை எடுத்தாளப்படுகின்றன?

_______________________________________________

_______________________________________________

5. புதிய இலக்கியங்கள் யாருடைய வாழ்வினை வெளிப்படுத்துகின்றன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தனிச்சிங்கள ஆட்சி மொழிச் சட்டத்தால் தமிழருக்கு ஏற்பட்ட நிலை என்ன?

______________________________

______________________________

2. உணர்ச்சிக் கவிஞர் எனப் போற்றப்படும் ஈழத்துக் கவிஞர் யார்?

______________________________

3. இலங்கையிலும் பர்மாவிலும் தமிழரது குருதியில் விளைந்தவை எவை?

______________________________

______________________________

4. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு

இக்குறளின் பொருளைத் தருக.

______________________________

______________________________

5. ஆரியர் கைபர் கணவாயின் ஊடாக எந்நாட்டுக்குள் நுழைந்தனர்?

______________________________

6. வில் எந்நிலத்திற்குரிய சிறந்த போர்க்கருவி?

______________________________

7. சேரன் செங்குட்டுவனுக்குக் கோவலன் கண்ணகி வரலாற்றை எடுத்துக் கூறியவர் யார்? கண்ணகிக்குச் சிலைவடிக்க எங்கிருந்து கல் கொண்டுவரப்பட்டது?

______________________________

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- தமிழுக்காக நீ பிறந்தாய் !
  தமிழையே உலகறியச் செய்தாய் !

- உண்மை நண்பர் கிடைத்துவிட்டால் - நீ
  ஓடிப் பழகி உறவாடு !

- காப்பாற்ற முடியவில்லையே கதறி அழுதோம்!
  கேட்பாரற்று நீங்கள் சிதறப் பதறித் துடித்தோம்!

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. குற்றியலுகரம் எத்தனை வகை? ____________________

ஆ. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ____________________
வன்றொடர்க் குற்றியலுகரம் ____________________

2. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| ஏரணம் | __________ | ஏதிலியர் | __________ |
| வெஞ்சினம் | __________ | மன்னுதல் | __________ |
| ஓதை | __________ | வெள்ளந்தி | __________ |

3. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

செயப்படுபொருள் குன்றிய வினை

____________________________________________

செயப்படுபொருள் குன்றா வினை

____________________________________________

4. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

உவமைத்தொகை ____________________
உம்மைத்தொகை ____________________

5. புணர்த்தி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| நாள் + காட்டி | __________ | அன்பு + அளிப்பு | __________ |
| சோறு + பானை | __________ | பொன் + காலம் | __________ |
| கண் + அப்பன் | __________ | கல் + தூண் | __________ |

புள்ளிகள் 15

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

There are invaluabe arts and cultural objects brought from all over the world, kept in the Luver museum. Greek, Rome and Egyptians arts beautify the museum.Also the world famous art of Monalisa is kept there. The person who drew this art was an Italian. People came from all over the world to see this Monalisa art. So this museum was refurbished again in 1981.Today this museum takes 2nd place in the list where a vast number of people visit it from all over the world.

Famose opere d'arti importate da tutto il mondo sono custodite all'interno del museo del Louvre. Opere greche, romane ed egizie sono esposte all'interno del museo. Inoltre è anche presente il dipinto famoso in tutto il mondo, la Gioconda (o Monna Lisa). Il dipinto è stato realizzato da un artista di origini italiane. I visitatori provenienti da tutto il mondo si recano in questo Museo per ammirare le varie opere d'arti. Per questa ragione nel 1981 il palazzo del Louvre è stato restaurato. Oggi il museo del Louvre è considerato il secondo museo più visitato al mondo.

Das Louvre Museum beherbergt unbezahlbare Malereien und Kunstwerke aus aller Welt. Griechische, römische und ägyptische Malereien verschönern das Museum. Zudem befindet sich hier auch das weltberühmte Gemälde der Mona Lisa. Der Maler dieses Gemälde stammt aus Italien. Um das Kunstmuseum zu besuchen, kamen Menschen aus vielen Ländern hierher. Deshalb wurde das Kunstmuseum im Jahre 1981 erneuert. Auf der Liste der weltweit meistbesuchten Kunstmuseen belegt das Louvre den zweiten Platz.

Ovärderliga målningar och konstföremål som har införskaffats från hela världen har blivit placerade på ett museum som heter Louvren. Grekiska, rumänska och egyptiska målningar ger skönhet till detta museum. Dessutom finns den världsberömda Mona Lisa målningen här. Personen som målade denna målning är från Italien. Folk från flera olika länder kommer hit för att besöka museet. Av denna anledning renoverades detta museum igen år 1981. Idag hamnar Louvren på andra plats bland de mest besökta museerna.

I Louvre Museum findes der dyrebare malerier og kunstsamlinger fra hele verden. Malerier fra Grækenland, Rumænien og Ægypten udsmykker det berømte museum. Desuden står det berømte maleri Mona Lisa også her. Maleren bag dette maleri kommer fra Italien. Der kommer hele tiden folk fra hele verden for at se dette museum. Derfor blev museet renoveret igen i år 1981. I dag har Louvre fået andenpladsen for den mest besøgte museum i verden.

In het museum Louvre zijn veel waardevolle spullen vanuit de hele wereld tentoongesteld. Er bevinden zich beelden uit Griekenland, van de Romeinen en Egyptische beelden. Ook is de beroemde Mona Lisa te bewonderen. De Mona Lisa is geschilderd door een Italiaan. Mensen over de hele wereld komen dit bekijken. Hierdoor is het in 1981 het schilderij vernieuwd. Het Louvre is de tweede meest bezochte museum in de wereld

I Louvre museum oppbevares det uvurderlig kunst og kulturgjenstander fra hele verden. Gresk, romersk og egyptisk kunst forskjønner museet.
Også det verdenskjente bildet Mona Lisa er her. Den personen som laget dette er italiensk. Folk kom fra hele verden for å se Mona Lisa. Museet ble pusset opp (restaurert) i 1981. I dag er museet på 2. plass på listen over de mest besøkte i hele verden.

Il y a des objets d'art et des objets culturels importants provenant du monde entier, conservés au musée du louvres. Les arts grecs, romains et égyptiens embellissent le musée.Le tableau mondialement connu de Monalisa y est également conservé. L'artiste qui a dessiné ce tableau était Italien. Les gens viennent de partout dans le monde pour voir ce tableau de Monalisa. Donc, ce musée a été rénové à nouveau en 1981. Aujourd'hui, le musée du Louvres prend la 2ème place des musées les plus visités au monde.

**புள்ளிகள் 05**

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- கழகத்தமிழ் இலக்கியங்கள்

- கல்வியின் சிறப்பு
  - கல்வி கற்பதில் உமது பங்கு
  - கல்வி கற்பதனால் ஏற்படும் நன்மைகள்
  - கல்வி கற்காவிடில் ஏற்படும் தீமைகள்
  - கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பழமொழி பற்றி நீர் அறிந்து கொண்டவை

- நீர் கண்டு களித்த கடற்கரைக்காட்சி

புள்ளிகள் 20